நாடெங்கும் ‘நீட்’டெனும் அரக்கனைக் கொண்டு வந்த

பி.ஜே.பி.யையும்-அ.தி.மு.க.வையும் விரட்டி அடிப்போம்!

‘நீட்’ என்கிற ஒரு அரக்கனை இந்தியா முழுவதும் செயல்படுத்தியதால் இதுவரை நாடு முழுவதும் 900 மாணவ-மாணவியர் நீட் தேர்வில் தேர்வாகாமல் மரணத்தை தழுவிக் கொண்ட அவர்களுக்கு இந்த நேரத்தில் இரங்கல் தெரிவித்து இனி மேல் அப்படி ஒரு நிலை மாணவர்களுக்கு ஏற்படக்கூடாது என்பதற்காக இன்றைக்கு இந்த நீட் நுழைவுத் தேர்வு இந்தியாவில் இருந்து முழுமையாக வெளியேற்றி அனைத்து மாநில மாணவ - மாணவியர் அவரவர் படிப்பில் தாய் மொழியில் பிளஸ் டூ படித்து எடுக்கிற மதிப்பெண்ணின் அடிப்படையில் மருத்துவப் படிப்புக்கு தேர்வு செய்ய வேண்டும் என்கிற முழு கோரிக்கையோடு ஒட்டுமொத்த மக்களுக்காக திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் ‘நீட்’ தேர்வை எதிர்த்து உண்ணாவிரத அறப்போரை இளைஞர் அணி செயலாளர் அமைச்சர் உதயநிதி அவர்கள் நடத்தியதை ஒட்டுமொத்த மக்களும் பாராட்டுகிறார்கள்

குறிப்பாக இந்தியாவில் மருத்துவர்களின் மொத்த எண்ணிக்கையில் 12 சதவீதம் மருத்துவர்கள் தமிழகத்திலிருந்து உருவாகிறார்கள் இதை கூறியவர் பி.ஜே.பி.யின்முன்னாள் சுகாதாரத் துறை அமைச்சர் ஹர்ஷ்வரதன் அவர்கள், ஜூலை 2019-ல் நாடாளுமன்றத்தில் பேசினார்கள் அந்த நேரத்தில் ரிதுஸ்ரீ. ஸ்ரீ வைசியா, மோனிஷா இந்த மூன்று மாணவிகளை தமிழ்நாடு நீட் தேர்வுக்கு பலி கொடுத்திருந்தது. அனிதா முதல் ஊரப்பாக்கம் அனு வரையும் இப்பொழுது மறைந்த ஜெகதீஷ் வரை சுமார் 21 மாணவ - மாணவியரின் மரணங்களை எண்ணிப் பார்க்க வேண்டும். சமீபத்தில் பலியான தனுஷ் கனிமொழி சௌந்தர்யா ஆகியோர் மரணங்களும் நம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது.

தமிழக அரசு கொண்டு வந்த நீட் விலக்கு மசோதா ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. அந்த மசோதாவை ஆளுநர் ஜனாதிபதிக்கு அனுப்பியதாக சொல்லுகிறார். இந்த ஒட்டுமொத்த தமிழ் மக்களின் உணர்வுகளை மதித்து மரியாதைக்குரிய ஜனாதிபதி அவர்கள் கையெழுத்திட்டு இந்தச் சட்ட மசோதாவுக்கு ஒப்புதல் கொடுத்து ஒன்றிய அரசுக்கு அனுப்பி இதை ஏற்றுக்கொண்டு ஒப்புதல் கொடுத்தால் தமிழகம் நீட்டில் இருந்து விலக்குப் பெற முடியும்

தமிழக அரசு மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி மாணவர்களுக்கு பள்ளி பாடத்தில் இருந்து நேர்முகத் தேர்வை நடத்தி அல்லது 12வது வகுப்பு மதிப்பெண் அடிப்படையில் அதிக மதிப்பெண் பெற்றவர்கள் எப்படி முன்பு மருத்துவத்திற்கும் பொறியியல் படிப்பிற்கும் தேர்வு பெற்றார்களோ அதே போல் அவர்கள் படித்த பாடத்திலிருந்து அவர்களுக்கு தேர்வு நடத்தி அவர்களை தேர்வு செய்தால் கிராமத்தில் இருக்கிற மாணவ-மாணவியர், ஏழை எளிய குடும்பத்தைச் சேர்ந்த மாணவ மாணவியர் பட்டியலினமக்களில் படித்த அப்பாவிகளுடைய குழந்தைகளின் தாய் தந்தையர் தங்களுடைய மகன் மருத்துவராக வருவான் பொறியாளராக வருவான் என்று மிக சந்தோசமாக ஒரு எதிர்காலத்தையே கற்பனைசெய்து வாழ்ந்து வந்தார்கள்.

தாய் தந்தையரின் கனவுகளை நினைவாக்க மருத்துவர்களாக, பொறியாளர்களாக நம்முடைய மாணவ மாணவியர் ஆயிரக்கணக்கில் அச்சத்தோடு வாழ்வின் எதிர்காலம் என்ன ஆகுமோ என்றில்லாமல் 1976-இல் ஒன்றிய அரசின் நிலைப்பாட்டிற்கு. கல்வியை பொதுபட்டியலுக்கு 42வது அரசியல் அமைப்புச்சட்டதிருத்தத்தின் வாயிலாக மாற்றியது.

1976க்கு பிறகு எத்தனை அரசுகள் இந்தியாவில் ஆட்சி புரிந்தன, பல சட்ட திருத்தங்களை கொண்டு வந்தார்கள் ஆனால் எந்த நடுவண் அரசும் கல்வியை பொது பட்டியலுக்கு மாற்றியதை மாநில பட்டியலுக்கு மாற்றி கொடுக்கவில்லை.

அதை மாற்றினால் இந்த பிரச்சினை முழுமையாக தீர்ந்து விடும் தீர்ந்திருக்கும் 2024 இல் வருகிற பாராளுமன்றத் தேர்தலில் ஒட்டு மொத்த இந்தியா மக்களும் இந்தியா என்கிற இந்த ஒன்றுபட்ட கூட்டணிக்கு வாக்களித்து ஒன்றிய அரசு கூட்டாட்சி தத்துவத்தின் அடிப்படையில் ஆட்சிக்கு வந்ததும் இந்தக் கல்விக் கொள்கையை முழுமையாக மாற்றுவதற்கு மாநில பட்டியலுக்கு கல்வியை மாற்றி அமைத்து ஆக வேண்டும். கண்டிப்பாக அது நடக்கும்.

அதற்கு ஒட்டுமொத்த மக்களும் வாக்களிக்க வேண்டும். இப்பொழுது இருக்கிற 18 வயது நிரம்பிய இளைஞர்கள் மாணவ மாணவியர்கள் உங்கள் எதிர்கால வாழ்க்கை தரத்தை உயர்த்த உங்களது கல்வியில் தரமான கல்வியை முழுமையாக கட்டணமில்லாமல் அரசு வழங்க மாநில பட்டியலில் கல்வித் துறையை சேர்க்க இப்பொழுது ஆளுகிற பி.ஜே.பி. அரசை ஆட்சியில் இருந்து அகற்ற வேண்டும். அதற்கு நீங்கள் அத்துணை பேரும் குறிப்பாக 6 கோடியே 27 லட்சம் வாக்காளர்களாக உள்ள தமிழக வாக்காளர்களில் 2 கோடியே 85 லட்சம் பேர் மாணவ மாணவியர்கள் இளைஞர்களாக இருக்கிறார்கள்.

பி.ஜே.பி.க்கும் எதிராக பி.ஜே.பி.யுடன் சேருகிற கட்சிக்கு எதிராக ஒட்டுமொத்த வாக்குகளையும் சிந்தாமல் சிதறாமல் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையில் தமிழகத்தில் அமைக்கிற கூட்டணிக்கு வாக்களித்தால், உங்கள் எதிர்காலம் பிரகாசமாக இருக்கும்.

2016 ஜூலை 24 நீட் தேர்வை நிரந்தரமாக்கும் வகையில் புதிய சட்ட திருத்தத்தை ஆளும் பா.ஜ.க. அரசு நாடாளுமன்றத்தில் கொண்டு வந்தது. 2.8.2017-ல் பா.ஜ.க. அரசு பாராளுமன்றத்தில் வாக்கெடுப்புநடத்தி தீர்மானம் நிறைவேற்றியது.

பி.ஜே.பி. அரசு வாக்கெடுப்பு நடத்துவதற்கு முடிவெடுத்து அன்றைக்கு இரு அவைகளிலும் சேர்ந்து அ.தி.மு.க.வுக்கு 52 எம்.பி.க்களை கொண்ட அ.தி.மு.க. கட்சி மாசோதாவுக்கு எதிராக வாக்களித்திருந்தால் ஒட்டுமொத்த இந்தியாவில் நீட் என்கிற அந்த அரக்கனை ஒழித்து இருக்க முடியும்.

கோவை
கே.செல்வராஜ்
முன்னாள் எம்.எல்.ஏ.
கழக செய்தி தொடர்பு
துணைச் செயலாளர்

நீட்டே இல்லாத ஒரு நிலைப்பாட்டை இந்திய மருத்துவத்துறை நிரந்தரமாக விலக்கு பெற்றிருக்கும். இந்தியா முழுவதும் லட்சக்கணக்கான மாணவ-மாணவியர் பிளஸ் டூ படித்துவிட்டு எந்த தேர்வும் எழுதாமல் நேரடியாக அவர்கள் இரண்டு ஆண்டுகள் படித்து பெற்ற மார்க்கின் அடிப்படையிலேயே எம்.பி.பி. எஸ். படித்து இருப்பார்கள். பொறியியல் கல்லூரிகள் படித்து இருப்பார்கள்

ஆனால் ஒட்டுமொத்தமாக இந்தியா முழுவதும் இருக்கிற அனைத்து மாணவ - மாணவியர் வாழ்க்கையில் அ.தி.மு.க. சூனியமாக செயல்பட்டது. மாணவ-மாணவியர் இந்தியா முழுவதும்நூற்று க்கணக்கில் தற்கொலை செய்து கொண்டார்களே, இந்த சம்பவத்திற்கு ஒரே காரணம் ஒரே கட்சி பி.ஜே.பி. அரசு, நீட்டை அமுல்படுத்துவதற்கு பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடத்தப்பட்ட பொழுது எதிர்த்து வாக்களிக்காமல் வெளிநடப்பு செய்து அங்கு இந்த மசோதா நிறைவேறுவதற்கு ஆதரவாக செயல்பட்ட அ.தி.மு.க.தான்.

இந்த பாவமும் பழியும் இந்த உலகம் இருக்கும் வரை அ.தி.மு.க.வின் மன்னிக்க முடியாத குற்றமாகும்.

மூன்று ராஜ்யசபா உறுப்பினர்கள் கொண்ட தி.மு.க. பி.ஜே.பி. அரசின் தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்தது.

அ.தி.மு.க. உறுப்பினர் நீட் மசோதாவுக்கு எதிராக வாக்களித்திருந்தால் நீட் சட்டமே அமலுக்கு வந்திருக்காது இந்தியாவில் இருக்கிற அத்தனை மக்களும் அத்தனை கட்சிகளும் சொல்லியும் கேட்காமல் அன்றைய தமிழ்நாட்டை முதலமைச்சராக இருந்த எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் பி.ஜே.பி.க்கு அடிமைத்தனமாக இருந்து செயல்பட்டதால் இந்த நிலைப்பாட்டை அ.தி.மு.க. எடுத்தது.

கடந்த 2017 ஆம் ஆண்டு பிப்ரவரி 1ஆம் தேதி எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான அ.தி.மு.க. அரசு நீட்டுக்கு எதிரான மசோதாக்களை நிறைவேற்றியது தி.மு.க. மற்றும் அனைத்து சட்ட மன்ற கட்சிகளும் ஆதரவுடன் நிறைவேறிய இந்த மசோதாக்களுக்கு அனுமதி கோரி குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது

21 மாதங்களாக எந்த பதிலும் ஜனாதிபதி மாளிகையில் இருந்து வரவில்லை எனக் கூறப்பட்டது. பலமுறை சட்டமன்றத்தில் அன்றைய சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் தளபதி அவர்கள் நாம் அனுப்பிய சட்ட மசோதா நீட் விலக்கு சம்பந்தமாக அனுப்பியது என்ன ஆனது இன்னும் ஏன் நீங்கள் அதை வலியுறுத்தி கேட்காமல் இருக்கிறீர்கள் என்று கேட்ட பொழுது அந்தக் கோப்பு எங்கு இருக்கிறது என்று தெரியவில்லை என்று டெல்லியில் பி.ஜே.பி. அரசின் அமைச்சர்கள் சொல்லுவதாக கூறினார்கள்.

அ.தி.மு.க. அரசு மவுனம் சாதித்து வந்தது, இந்த நிலையில் 2017 ஆம் ஆண்டு செப்டம்பர் 22ஆம் தேதி நீட்டு விலக்கு மசோதாக்களை திருப்பி அனுப்பி விட்டதாகவும் 2019 ஆம் ஆண்டு நீதிமன்றத்தில் கூறியது ஒன்றிய அரசு. இதற்கிடையே ஒன்றிய அரசு நிராகரித்து அனுப்பிய கடிதத்தை 2017 ஆம் ஆண்டு செப்டம்பர் 22ஆம் தேதி சட்டத்துறை செயலாளர் பூவலிங்கம் பெற்றுவிட்டார். இதை வெளியிலே தெரியாமல் அப்படியே மூடிமறைத்திருக்கிறார்.

தமிழ்நாடு முதலமைச்சராக இருந்த எடப்பாடி பழனிச்சாமி தவறான கருத்துக்களை கூறிக்கொண்டு பி.ஜே.பி.க்கு பயந்து கொண்டு அமைதியாகவே இருந்தார்.

தமிழ்நாட்டில் எடப்பாடியின் ஆட்சி தனது கோர முகத்தை காட்டத் தொடங்கியது தமிழக அரசு எடப்பாடி அரசு உடனடியாக ஒன்றிய அரசின் மிரட்டலுக்கு பயந்து சட்டமன்றத்தில் கல்வி அமைச்சரும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரும் பகிரங்கமாக தெரிவித்தார்கள் நீட்டை படிக்கும் மாணவ மாணவியருக்கு தமிழ்நாடு முழுவதும் அரசு பள்ளிகளிலேயே சனி ஞாயிறு விடுமுறை நாட்களிலும் மற்ற நாட்களிலும் அவர்களுக்கு பயிற்சி கொடுப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம்.

ஆசிரியர்களுக்கும் பயிற்சி கொடுத்துக் கொண்டிருக்கிறோம் அரசே பயிற்சி கொடுத்து அவர்களை மருத்துவர்களாக தேர்வு ஆவதற்கு தகுதி உள்ளவர்களாக மாற்றுவோம் அதற்காக நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என்றெல்லாம் கூறினார்கள். ஆனால் தமிழகமெங்கும் எல்லா மாவட்டத் தலைநகரங்களில் தாலுகா தலைநகரங்களில் எல்லாம் நீட் தேர்வுக்கு கோச்சிங் சென்டர் நடத்துபவர்கள் அதிகமான நிலையங்கள் ஈசல்கள் போல் ஆரம்பித்து விட்டார்கள்.

அவர்கள் கட்டணங்கள் ரூ.2 லட்சம் மூன்று லட்சம் என்று இந்த கோச்சிங் சென்டர் வசூலிக்க ஆரம்பித்து விட்டார்கள் அதில் பணம் படைத்தவர்கள் உயர் வகுப்பினர் வசதியானவர்களுடைய குழந்தைகள் மட்டும் படிக்க முடிந்தது. கிராமப்புறத்து மாணவ - மாணவியர் ஏழ்மையில் இருக்கிற மாணவ-மாணவிகள் தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்கள் பட்டியல் இன மக்கள் இன்னும் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கிற குடும்பத்தைச் சேர்ந்த மாணவ - மாணவியர் அத்துனை பேரும் நீட்டில் கலந்து கொள்ள முடியாமல் தேர்வு எழுத முடியாமல் அழுது புலம்பினார்கள். ஏராளமான குழந்தைகள் எதிர்காலத்தில் நாம் மருத்துவராக வருவேன் என்ற கனவு கண்டால் அந்த கற்பனையை எல்லாம் இழந்தார்கள்.

இந்த நிலைப்பாட்டை உருவாக்கிக் கொடுத்தவர் தமிழ்நாட்டில் மாணவ - மாணவியரின் வாழ்க்கையில் ஒரு சூனியமாக செயல்பட்டவர் எடப்பாடி பழனிச்சாமி.

மாணவ - மாணவியர் வாழ்க்கையின் எதிர்காலத்தையே இல்லாத ஒரு சூழ்நிலையை உருவாக்கிக் கொண்டிருக்கும் பி.ஜே.பி. ஆட்சியை எதிர்த்து தமிழக அரசும் திராவிட முன்னேற்றக் கழகமும் எத்தனை பிரச்சினைகள் வந்தாலும் எத்தனை சோதனைகள் வந்தாலும் அது எதிர்கொண்டு செயல்படுவதில் பின்வாங்காது என்பது தமிழக எட்டு கோடி மக்களின் நம்பிக்கையை பெற்ற தி.மு.க.வின் முழு முயற்சியை பயன்படுத்தும் உறுதியாக நிற்கும்.

ஆனால் அ.தி.மு.க. என்கிற கட்சி நீட்டைக் கொண்டு வருவதற்கு காரணமான கட்சி இதை ஒட்டுமொத்த மக்களும் தமிழகத்தில் வருகிற 2024 பாராளுமன்ற தேர்தலில் தூக்கி எறிவார்கள். அதுதான் சரியான பதிலாக இருக்கும்.

அரசியலமைப்பு சட்டத்தில் மாநில அரசுக்கும் சட்டமியற்றும் அதிகாரம் உள்ளது. ஆனால் மத்தியில் சர்வாதிகார ஆட்சி இருப்பதனால் அந்த சட்டத்தை செயல்படுத்த போராட வேண்டி உள்ளது.

தமிழக மக்களின் உணர்வுகளை புரியாமல் ஒன்றிய அரசு முழுமையான ஜனநாயக மரபுகளை மீறி ஆணவப் போக்கோடு தொடர்ந்து ஆட்சியில் மட்டும் இருக்க வேண்டும் என்றும் இது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு என்பதை மறந்து பிரதமர் தனித்து அவர் மட்டும் பிரதமராக இருக்க வேண்டும் அதிபர் ஆட்சியைப் போல் இந்தியாவில் நடத்த வேண்டும் என்கிற வெறித்தனமான செயல்பாட்டோடு செயல்பட்டு வருகிறார்கள் அதை ஒட்டுமொத்த மக்களும் முறியடித்துக் காட்டுவார்கள்.

இந்தியா முழுவதும் ஒட்டுமொத்த மக்களும் நீட்டுக்கு எதிராக விவசாய குடும்பத்து மாணவர்கள் பட்டியலினமானவர்கள், தாழ்த்தப்பட்ட மாணவர்கள், ஏழை மாணவர்கள், பின்தங்கிய மாணவர்கள், கிராமத்து மாணவர்கள்,

நீட்டை படிக்க முடியாமல் தேர்வு எழுத முடியாமல் வாழ்நாள் முழுவதும் மருத்துவராக வரவேண்டும் என்கிற கனவோடு படித்த அந்த மாணவர்களின் வாழ்வில் மண்ணை வாரி போட்ட எடப்பாடி பழனிச்சாமியின் நீட்டின் ஆதரவு நிலைபாட்டால் இந்தியா முழுவதும் பாதித்த லட்சக்கணக்கான மாணவர்களின் சாபத்துக்கு ஆளான எடப்பாடி பழனிச்சாமியை வாழ்நாள் முழுதுமாக மக்கள் மன்னிக்க மாட்டார்கள்.

நீட்டில்லாத நிலையை 2024இல் நிச்சயம் பெறுவோம்.

பா.ஜ.க வின் ஜும்லா வாக்குறுதிகளை மக்கள் நம்ப மாட்டார்கள்!

மகளிர் இட ஒதுக்கீடு மசோதா உடனடியாக பலன் தராது!

மாநிலங்களவையில் இரா. கிரிராஜன் பேச்சு

புதுடெல்லி, செப். 28-

நாடாளுமன்ற மாநிலங்களவையில் 33சதவிகித மகளிர் இட ஒதுக்கீடு மசோதா மீதான விவாதத்தில் கலந்து கொண்டு இரா. கிரிராஜன் பேசியதாவது:-

திமுக சார்பில் இந்த அவையில் பேச வாய்ப்பளித்த எனது அன்புத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலினுக்கு முதலில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். 75 ஆண்டுகளாக பெண்கள் உரிமைக்காக போராடி வரும் திராவிட முன்னேற்றக் கழகம், மகளிர் இடஒதுக்கீடு மசோதாவை வரவேற்கிறோம்.

சர்ச்சைக்குரிய வேளாண் சட்டங்கள், குடியுரிமை திருத்தச் சட்டம், காஷ்மீர் சிறப்பு அந்தஸ்துச் சட்டம் மற்றும் மகளிர் இட ஒதுக்கீடு மசோதாவை நிறைவேற்ற, 10% இட ஒதுக்கீடு ஆகியவற்றில் காட்டிய அக்கறையில் ஒரு சதவீதம் கூட, மோடி அரசு ஏன் காட்டவில்லை என்பதுதான் பொருத்தமான கேள்வி?

இப்போது மசோதா நிறைவேற்றப்பட்டாலும், அதை செயல்படுத்த இன்னும் பல ஆண்டுகள் ஆகும். மக்கள் அவையில் பெண்களுக்கு இட ஒதுக்கீடு அளிப்பது தொடர்பான அரசியலமைப்பின் 334 ஏ பிரிவில் ஒரு உட்பிரிவு சேர்க்கப்பட்டுள்ளதால், அரசியலமைப்பு (நூற்று இருபத்தெட்டாவது திருத்தம்) சட்டம் திருத்தப்பட்ட பிறகு எடுக்கப்பட்ட முதல் மக்கள்தொகை கணக்கெடுப்புக்கான பொருத்தமான புள்ளிவிவரங்களுக்குப் பிறகு இந்த நோக்கத்திற்காக எல்லை மறுவரையறை மேற்கொள்ளப்பட்ட பின்னர் ஒரு மாநிலத்தின் சட்டமன்றம் நடைமுறைக்கு வரும்.

2029 -க்குள் அமல்படுத்த முடியாது!

தொகுதி மறுவரையறை முடிந்த பிறகு இது அமல்படுத்தப்படும். 2026ம் ஆண்டுக்குப் பிறகே பல்வேறு மாநிலங்களில் உள்ள மக்களவைத் தொகுதிகள் மற்றும் சட்டமன்றத் தொகுதிகளின் மறுவரையறை செய்யப்படும். தொகுதி மறுவரையறைக்குப் பிறகு அடுத்த தேர்தல் 2029ல் நடைபெறும். எனவே 2029ம் ஆண்டுக்குள் இந்த சட்டத்தை அமல்படுத்த முடியாது.

மக்கள் தொகை கணக்கெடுப்பு எப்போது நடக்கும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை; ஒருபோதும் நடக்காத மக்கள்தொகை கணக்கெடுப்பு, அதன் அடிப்படையிலான மறுசீரமைப்பு மற்றும் இப்போது 2029 இல் நடைமுறைக்கு வருவதாகக் கூறப்படும் சட்டத்தை நிறைவேற்றுவதற்கான விசித்திரமான தந்திரம் இவை அனைத்தும் தேர்தல் தோல்வியின் போலித்தனமாகும்!

நாடு முழுவதும் உள்ள மாநிலங்களில் மக்களவைத் தொகுதிகள் மற்றும் சட்டமன்றத் தொகுதிகளின் எண்ணிக்கையைக் கணக்கிடுவதற்கு முன்பு, தொகுதி மறுவரையறையினால் ஏற்படும் பிரச்சினைகளும் ஏராளமாக உள்ளன.

தொகுதி மறுவரையறை என்ற பெயரில் மக்களவையில் தென்னிந்திய மக்களின், குறிப்பாக தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களின்பிரதிநிதித்துவத்தைக் குறைக்கும் தந்திரத்தை முளையிலேயே நசுக்க வேண்டும்; தமிழ் நாட்டையும் பிற தென்னிந்திய மாநிலங்களையும் ஏமாற்ற மாட்டோம் என்ற உத்தரவாதத்தை மத்திய அரசு அளிக்க வேண்டும்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த பெண்களுக்கு இடஒதுக்கீடு கோரிக்கையின் பின்னணியில் உள்ள நியாயத்தை பாஜக தலைமையிலான அரசு பரிசீலிக்க வேண்டும். 33% இடஒதுக்கீட்டை அமல்படுத்தும் போது ஓபிசி மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த பெண்களுக்கு உள் இடஒதுக்கீடு இருக்க வேண்டும். தி.மு.க தலைவரும், தமிழக முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது அறிக்கையில் இந்த அம்சத்தை மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

பாலின சமத்துவம் என்பது பெண்களுக்கு எல்லா வழிகளிலும், எல்லா இடங்களிலும் அதிகாரம் அளிப்பதாகும். அதற்கு, அவர்களுக்கு முதலில் உரிய இடம் வழங்க வேண்டும். இதை திராவிட முன்னேற்றக் கழகம் வலியுறுத்தி வருகிறது. தி.மு.க., ஆட்சி அமையும் போதெல்லாம், இது செயல்படுத்தப்படுகிறது.

1996ம் ஆண்டு உள்ளாட்சி அமைப்புகளில் மகளிருக்கு 33 சதவீத இடஒதுக்கீடு வழங்கி முதல்வர் கலைஞர் உத்தரவிட்டார். 1996ம் ஆண்டு இறுதியில் ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள் போன்ற உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலை நடத்தி 33% மகளிர் இடம்பெற்றனர்.

மகளிர் இடஒதுக்கீடு மசோதா சுமார் 27 ஆண்டுகளாக நிலுவையில் உள்ளது. மகளிர்இடஒதுக்கீடு மசோதா 1996 ஆம் ஆண்டு முதன்முதலில் தி.மு.க. ஆட்சியில் கொண்டுவரப்பட்டது. 2005ம் ஆண்டும் தி.மு.க.வை உள்ளடக்கிய மத்திய அரசு இந்த மசோதாவை தாக்கல் செய்தது. முதலில் ஆதரிப்பதாக கூறிய பா.ஜ.க, அதை எதிர்த்தது, பா.ஜ.க. சார்பில் பேசிய உமாபாரதி கடும் எதிர்ப்பு தெரிவித்தார் கடந்த காலங்களில் இதை எதிர்த்தவர்களில் தற்போதைய உ.பி முதல்வர் யோகி ஆதித்யநாத்தும் ஒருவர்.

பா.ஜ.க. அக்கறை காட்டவில்லை!

காங்கிரஸ், திமுக தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணிII ஆட்சியின் கீழ், மகளிர் இடஒதுக்கீடு மசோதா மகளிர் தினமான மார்ச் 8, 2010 அன்று மாநிலங்களவையில் அறிமுகப்படுத்தப்பட்டு, ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியின் போது அடுத்த நாளே நிறை வேற்றப்பட்டது. தேவகவுடா அரசு இந்த மசோதாவை தாக்கல் செய்த போது அதில் தி.மு.க சார்பில் திருச்சி சிவா பேசினார். துரதிர்ஷ்டவசமாக சில அரசியல் கட்சிகளின் எதிர்ப்பு காரணமாக மக்களவையில் நிறைவேற்ற முடியவில்லை. அதன் பிறகு ஆட்சிக்கு வந்த பாஜக அரசு இந்த மசோதாவை கிடப்பில் போட்டது.

2014 மற்றும் 2019 தேர்தல்களில் பாஜக அரசு பெரும்பான்மை பெற்றது. அவர்கள் மசோதாவை நிறைவேற்ற நினைத்திருந்தால், அதை உடனடியாக நிறைவேற்றியிருக்கலாம். ஆனால், தங்களுக்கு நன்கு தெரிந்த காரணங்களுக்காக மசோதாவை அறிமுகப்படுத்தக் கூட அவர்கள் அக்கறை காட்டவில்லை.

2017ம் ஆண்டு தி.மு.க.சார்பில் மகளிர் அணி செயலாளரும், முன்னாலள் மாநிலங்களவை உறுப்பினருமான தற்போதைய மக்களவை உறுப்பினருமான கனிமொழி தலைமையில் நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்ற தொகுதிகளில் பெண்களுக்கு 33% இடஒதுக்கீட்டை அமல்படுத்த வலியுறுத்தி டெல்லியில் பேரணி நடத்தினோம்.

ராஜீவ்காந்தி - மன்மோகன் சிங் சாதனை!

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி உள்ளாட்சி அமைப்புகளில் இடஒதுக்கீட்டை உறுதி செய்தார். நாடாளுமன்றம் மற்றும் மாநில சட்டசபைகளுக்கான மகளிர் இடஒதுக்கீடு மசோதாவை முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் மாநிலங்களவையில் தாக்கல் செய்தார். இருவரின் சாதனைகளும் இப்போது நினைவுகூரப்பட வேண்டியவை.

மத்திய அரசு கொண்டு வந்துள்ள மகளிருக்கு 33 சதவீத இடஒதுக்கீடு வழங்கும் மசோதாவை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வரவேற்கிறேன். பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த பெண்களுக்கான பிரதிநிதித்துவக் கோரிக்கையை புறக்கணிக்காமல், அதன் நியாயத்தை மத்திய ஆட்சியாளர்கள் பரிசீலிக்க வேண்டும் என்று நான் வலியுறுத்துகிறேன்.

பத்தாண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் மக்கள்தொகை கணக்கெடுப்பை இதுவரை நடத்தாத ஒரே நாடு இந்தியா மட்டுமே. அது எப்போது நடக்கும் என்பது குறித்து பாஜக இதுவரை எந்த உத்தரவாதமும் அளிக்கவில்லை.

தென்னிந்தியாவிற்கு பாதிப்பு!

மக்கள்தொகையை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு தொகுதிகளை மறுவரையறை செய்வது தமிழ்நாடு மற்றும் தென்னிந்திய மாநிலங்களின் தலையில் தொங்கும் கத்தியாகும். உ.பி., பீஹார் போன்ற வட இந்திய மாநிலங்களின் எம்.பி.,க்களின் எண்ணிக்கையை அதிகரித்து, தென்னிந்தியாவின் அரசியல் பிரதிநிதித்துவத்தை குறைக்கும் அரசியல் சதி முறியடிக்கப்பட வேண்டும். சமத்துவ அரசியல் உணர்வுள்ள தமிழகத்தை ஏமாற்றும் அநியாய முயற்சியை முளையிலேயே நசுக்க வேண்டும். நிலவின் தென்துருவத்தில் சந்திரயான் கால் பதிக்கலாம் , ஆனால் பாஜகவால் தென்னிந்தியாவில் காலூன்ற முடியாது.

சமூகநீதி, பாதுகாவலர்கள், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் ஆகியோரின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி, மகளிர் மேம்பாட்டிற்கான தொலைநோக்குப் பார்வை கொண்ட பல்வேறு திட்டங்களையும், திமுக அரசு செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திராவிட ஆட்சிமுறையின் பாரம்பரியத்தைத் தொடர்கிறார். தமிழகத்தில் கடந்த 50 ஆண்டுகளாக செயல்படுத்தப்பட்டு வரும் பெண்களுக்கான நலத்திட்டங்கள்.

1.1989ல் குடும்பச் சொத்துக்களில் பெண்களுக்கு சம உரிமை, 2.அரசு வேலை வாய்ப்பில் பெண்களுக்கான இடஒதுக்கீடு 40% ஆக உயர்வு, 3. மகப்பேறு ஊட்டச்சத்தை உறுதி செய்யும் நோக்கில் டாக்டர் முத்துலட்சுமி மகப்பேறு நிதியுதவி திட்டம், 4. கல்வி, திருமண உதவி மற்றும் மறுமணத்திற்கான திட்டங்கள், 5. அரசு நகர பேருந்துகளில் பெண்களுக்கு கட்டணமில்லா பயணம், 6. மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உத்தர வாதத் திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட படிப்பை முடிக்கும் வரை மாணவிகளுக்கு ரூ.1,000 நிதியுதவி வழங்கப்படுகிறது. 7. தமிழக அரசு பெண்களுக்கான மாபெரும் சமூக நலத் திட்டமான கலைஞர் மகளிர் வாழ்வுரிமைத் திட்டத்தை செப்டம்பர் 15ம் தேதி தொடங்கியது. இத்திட்டத்தின் மூலம் மாநிலத்தில் உள்ள ஒரு கோடியே 6 லட்சத்து 50 ஆயிரம் தகுதியான பெண் குடும்பத் தலைவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1,000 நிதியுதவி வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு முன் மாதிரி மாநிலம்!

நமது மாபெரும் தலைவர்களான தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, டாக்டர் கலைஞர், தளபதி மு.க.ஸ்டாலின் ஆகியோரின் தொடர் முயற்சியால் நாட்டிலேயே முன்மாதிரி மாநிலமாக தமிழகம் திகழ்கிறது. எங்கள் திராவிட மாதிரி அரசே, தேர்தல் வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றி விட்டோம்.

ஆனால், அதே நேரத்தில் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு கிட்டத்தட்ட பத்தாண்டு காலமாக மத்தியில் உள்ளது. இதுபோன்று தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றாத வேறு எந்த அரசையும் நாம் பார்த்ததில்லை.

வெளிநாடுகளில் இந்தியர்கள் பதுக்கி வைத்துள்ள கருப்புப் பணம் அனைத்தும் மீட்கப்படும் என்றும், ஒவ்வொரு குடிமகனின் வங்கிக் கணக்கிலும் ரூ.15 லட்சம் டெபாசிட் செய்யப்படும் என்றும் அவர்கள் உறுதியளித்தனர். இது பா.ஜ.க.வின் மிகப்பெரிய “தேர்தல் ஜும்லா வாக்குறுதியாக” உள்ளது.

இந்த நாட்டு மக்களுக்கு, குறிப்பாக படித்த இளைஞர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் 2 கோடி புதிய வேலைவாய்ப்புகளை வழங்குவதாக பாஜக உறுதியளித்துள்ளது, ஆனால் வேலையின்மை பிரச்சினை சுதந்திர இந்தியாவின் வரலாற்றில் மிக உயர்ந்த நிலையை எட்டியுள்ளது.

மக்கள் தக்க பாடம் புகட்டுவர்!

நரேந்திர மோடி பிரதமரானபோது நதிகளை குறிப்பாக தீபகற்ப நதிகளை இணைப்பதாக இந்திய மக்களுக்கு வாக்குறுதி அளித்தார், ஆனால் இதுவரை எதுவும் நடக்கவில்லை. இந்த வாக்குறுதிகள் அனைத்தும் இன்னும் தேர்தல் ஜும்லா வாக்குறுதிகளாகவே உள்ளன.

*மகளிர் இடஒதுக்